


FREE EDITION

June - 2012

# ஜோதி

ஆன்மிகச் செய்திச்சுடர்

Jothi

ஜோதி 6: சுடர் 04 - 64

Spiritual Newsletter


மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே
*

**அன்னையின் அருள்வாக்கு**

**“ஆன்மிகத்தில் வேதனையும் உண்டு, சோதனையும் உண்டு. ஆனால், சோர்ந்து விடக்கூடாது. தயங்கி நின்று விடக்கூடாது. அந்தச் சோதனைகளைக் கடப்பதுதான் உனது சாதனை.”**

## சோதிடம்




### கிரகங்களும் மனித வாழ்வும்

**எ**ல்லாம் வல்ல பரம்பொருளான நம் அன்னை ஆதிபராசக்தி கோடிக்கணக்கான தன் கூறுகளைக்கொண்டு, அண்ட சராசரங்களையும், படைத்தும் காத்தும் அழித்தும் வருகிறாள். நில உலகம் போலப் பல உலகங்கள் இந்த அண்டத்தில் உண்டு. அவற்றை இயக்கி ஆட்சி நடத்தும் தெய்வங்கள் உண்டு. தேவதைகள் உண்டு.

### அன்னையின் அரசாங்கம்

அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஓர் அரசன் நாட்டை ஆட்சி புரிவதுபோல, பிரபஞ்சங்களையும் தன் தெய்வ சக்திகளைக்கொண்டே அன்னை ஆட்சி புரிகின்றாள். சில சட்டங்களையும், அதிகாரிகளையும் கொண்டு அரசன் ஆட்சி நடத்துவதுபோல அன்னை ஆதிபராசக்தியும் கரும சட்டம் என்ற சட்டங்களின் துணை கொண்டு அண்ட சராசரங்களையும் ஆட்சி புரிந்து வருகின்றாள். அவள் கருமச் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரிகளே நவக்கிரகங்கள்.

**பரம்பொருளான அன்னை ஆதிபராசக்தியை சரணடைந்த பக்தர்களுக்கு சோதிடம் ஒரு பொருட்டல்ல. அவளே நவக்கிரகநாயகி. சரணடைந்த பக்தனின் விதியையே மாற்றுபவள்.**

### லக்கனம் கணிப்பது

பிறந்த நேரத்தை வைத்துக்கொண்டு, கிரக நிலை கணித்து வாழ்நாள் முழுவதற்கும் சுகதுக்க பலன்களைச் சொல்லிவிடலாம். சுகதுக்க பலன்களுக்குக்காரணம் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. இது பலபேர், ஒரே வியாதிக்கு வெவ்வேறு காரணம் சொல்கிறமாதிரிதான்.

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

“தெய்வம் மனிதன் ஆகலாம்; மனிதன் தெய்வம் ஆகலாம்; ஆன்மா ஒன்றுதான்; ஆக்கப்படும் உருவங்கள்தான் வேறுவேறு!”

சுடரில்.....

சோதிடம்

பக்கம் - 1 - 3

UPCOMING EVENTS

Melbourne – Pg 7, 8
Sydney _ Pg 9
Brisbane _ Pg 13

திருமதி அம்மா பதில்கள்

பக்கம் : 14

அருள்வாக்கும் அனுபவங்களும்..

பக்கம்: 10-11

Divine Miracles

Pg: 16

ஆன்மிக நாட்குறிப்பு

பக்கம் : 15

ஆகம வழிபாட்டு முறைகள்

பக்கம்: 4 - 6

## சோதிடம்....

டாக்டர்கள் தாது வித்தியாசத்தால் இந்த வியாதி உண்டாயிற்றென்று சொல்கிறார்கள்.

மந்திரவாதிகள் தெய்வக்கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள்.

சோதிடன் கிரக நிலையால் வந்தது என்கிறான்.

தர்ம நூல்கள் பூர்வகர்ம பலன் என்று சொல்கிறது.

உணர்ச்சி மாறுதல்களாலேயே உடல்நிலையும் மாறிவிடுகிறது என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். இப்படி ஒன்றுக்கே பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் **இவைகள் வருவதற்குண்டான காரணங்கள் ஒருவனுடைய ஊழ்வினை பலன்களேயாகும்.**

**ஊழ்வினையை அனுபவித்துத்தான் கழிக்க வேண்டும் என்பது விதி. ஆனால், அன்னையைச் சரணடைந்தால் ஊழ்வினைக் கொடுமைகள் தணியும் என்கிறார்கள். அன்னையைச் சரணடைவதால் 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகும்'.**

பாவத்திற்குரிய பலன்களை எப்படி அனுபவிக்க வேண்டியுள்ளதோ, அப்படியே ஒருவன் புண்ணியத்திற்குரிய பலன்களையும் உரிமையோடு சாப்பிடலாம். அந்தப் பலனை சாப்பிட்டுக்கொண்டிருக்கிற வரையில் ஒருவன் என்ன அநியாயம், அக்கிரமம் செய்தாலும் அந்தப் புண்ணிய பலன்கள் காலியாகிற வரை அவன் மேல் எந்தத் தெய்வமும் கை வைப்பதில்லை. நவக்கிரகம் தலையிடுவதில்லை.

'அறம் வளர்த்துத் தொண்டு செய்தால் அரசாளும் வாய்ப்பு உண்டு' என்பது அன்னையின் அருள்வாக்கு. இத்தகையவர்க்கே ராஜயோகம், அரச போகங்கள் கிடைக்கின்றன. பதவி, சுகங்கள் கிடைக்கின்றன. இவை பூர்வ ஜென்ம புண்ணியத்தால் நமக்குக் கிடைத்தவை என்று அறிந்துகொள்கிற புத்திசாலி, அடக்கத்தோடு நடந்துகொண்டு மேலும் புண்ணியங்கள் செய்து இறையருளைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். அதற்கு மாறாகப் பதவி, பட்டம், அதிகாரம், ஆடம்பரம், பணம், பெண் என்று ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினால் அதற்குரிய கணக்கும் இன்னொரு புறம் சேர்ந்துகொண்டு வரும்.

'நேர்மை தவறி நடப்பவன் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பலாம். சக்தியின் பிடியிலிருந்து தப்ப முடியாது'என்கிறாள் அன்னை.

## நவக்கிரகங்கள்

முன்பே சொன்னபடி இந்தக் கருமச்சட்டத்தை நிறைவேற்றும் அதிகாரிகளாக நவக்கிரகங்கள் செயல்படுகிறார்கள். வாரத்தில் உள்ள ஏழு நாட்களின் பெயர்களும், ஏழு கிரகங்களை ஒட்டி அமைந்தவை. ஏழு கிழமைகளுக்கு ஏழு கிரகங்கள் அவற்றுடன் இராகு, கேது என்ற இரண்டு கிரகங்களும் சேர்ந்தே நவக்கிரகங்களாகும்.

வாரத்தில் ஒரு நாள் எந்தக் கிரகத்தில் ஆதிக்கம் அதிகமோ அந்தக் கிரகத்தின் அந்தக்கிரகத்தின் பெயர் பெயரால் அந்த நாளின் பெயர் வைக்கப்பட்டுள்ளது. **ஒவ்வொரு கிரகமும், ஒவ்வொரு போக்கில், பிரபஞ்சத்தைச் சுற்றி வருகிறது. அது கருதியே ஒன்றை ஒன்று பார்த்துக்கொள்ளாதபடி நவக்கிரக சந்நிதியில் விக்கிரகங்கள் அமைந்துள்ளன.**

(தொடர்ச்சி....3ஆம் பக்கம்)

## சோதிடம்....

நவக்கிரகங்களால்தான் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும் நடைபெறுகின்றன. ஒருவனுக்கு தசாபுத்தி, உச்ச நீசங்கள், நட்பு, ஆட்சி, பகை, தவிப்பு, பார்வை இவற்றால் உண்டாகும் சுகம், துக்கம், ஆயுள், மரணம் இவைகளுக்கு காரணிகள் என்பர்.

அவனவன் பாவ புண்ணியக் கணக்குகளின் அடிப்படையில், அவரவர்க்குரிய பலன்களைக் கடவுள் இந்தக் கிரகங்கள் மூலமாக அளந்து கொடுக்கிறார் என்கிறது சோதிட சாத்திரம்.

## சோதிட சாத்திரம்

பிராப்த கர்மத்தினால் - இந்தப் பிறவியில் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களை அளந்து சொல்கிற தெர்மா மீட்டர் போன்றது சோதிட சாத்திரம்.

சூரியன் ஒளிக்கதிர்களால் உலகத்தை எழுப்பி உயிர்களைக் கடமை புரிய வைக்கிறான். தாவரங்களை வளர்க்கிறான். சந்திரன் தனது அமுத கலைகளை நிலம், நீர்களில் நிரப்புகிறான். ஆண், பெண்களுக்குக் காம எண்ணத்தைத் தோற்றுவிக்கிறான். அதனால் படைப்பு நிகழ்கிறது. பயிர்களை சீதக் கரங்களால் பால் பிடிக்க வைக்கிறான். அப்பயிர்களால் தானியங்கள் செழிக்கின்றன.

சூரியன், சந்திரன் இவர்கள் மட்டும் தான் நம் கண்களுக்குத் தெரியக்கூடியவர்கள். செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி நம் கண்களுக்குச் சாதாரணமாகத் தெரியவில்லை. இந்த ஐந்து கிரகங்களும் ஐம்பூதங்களைக் குறிக்கும்.

| | |
|---|---|
| செவ்வாய் | உடலில் நெருப்பு (உடன்பிறப்புகள்) |
| புதன் | காற்று (தாய் மாமா வர்க்கம்) |
| வியாழன் | மண் (புத்திரர்) |
| வெள்ளி | நீர் (மனைவி) |
| சனி | ஆகாயம் (முக்தி) |
| இராகு, கேது | நிழல் கிரகங்கள் |

இவை ஒவ்வொன்றும், ஒன்றிலொன்று ஒடுங்குகின்றன. அதாவது மண் நீரிலும், நீரானது தீயிலும், தீயானது காற்றிலும், காற்று ஆகாயத்திலும், ஆகாயம் மனதிலும் (அண்ட வெளியில்) ஒடுங்குகின்றன. சோதிடம் பற்றி சுருக்கமானதாகவே இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளது.

## சோதிடம் பற்றி அன்னை கூறியது:

சோதிடம் பார்த்து இந்தக் கிரகத்திற்கு இந்தத் தெய்வத்தை நாடினால் பலன் உண்டு என்று அலைகிறவர்கட்கு மேலும் குழப்பத்தை உண்டாக்கி விடுகிறாள். அன்னை அத்தனை தெய்வங்களையும் ஆட்டிப்படைப்பவள். நவக்கிரகங்கள், தேவ கணங்கள் அவை அன்னைக்குள் அடக்கம். அம்மாவின் பக்தர்களுக்கு நவக்கிரகங்கள் பற்றிய அச்சம் தேவையில்லை என்று அன்னை கூறியிருக்கிறாள். இதிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் அன்னையிடம் உறுதியாகப் பக்தி செலுத்தினால், நவக்கிரகங்களைப் பற்றிய அச்சமோ தயக்கமோ தேவையில்லை என்று புரியும்.

சோதிடர்களை மட்டும் தேடி அலையாமல் அன்னையிடம் சரணடைபவர்களை அன்னையே காப்பாற்றுவாள் என்பது சத்தியம்.

(நூல்: ஆன்மிக மடல்)

▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶

**பாதிக்கப்படாமலிருக்க ஆன்மிக ஈடுபாடு**

**“உன்னைச் சுற்றிப் பத்துப்பேர் இருந்தால் அந்தப் பத்துப்பேர் எண்ணங்களும் உன்னைச் சூழ்ந்தபடியே இருக்கும். அவர்களில் மிருக குணமும் உண்டு. சாதுவான குணங்களும் உண்டு. அந்த எண்ணங்களால் நீ பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் உன் உள்ளம் ஆன்மிகத்தில் ஈடுபட வேண்டும்”.**

▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶▶

# ஆகம வழிபாட்டு முறைகள்

ஒரு கோயில் கட்டி, அதில் தெய்வ விக்கிரகங்களை நிறுவி, அபிடேகம், அர்ச்சனை என்ற முறைகளில் பூசிப்பது ஆகம வழிபாட்டு முறை. திராவிடர்களின் வழிபாட்டு முறை இது. இறைவனை வழிபட்டு உயர்வதற்காக இயற்றப்பட்ட நூல்களே ஆகமங்கள்.

## கற்பூர ஆர்த்தி

**கற்பூர ஆரத்தியின் உட்பொருள் வருமாறு:**
நம் ஆத்மா பரமாத்மாவான கடவுளோடு கலப்பதைக் குறிப்பது கற்பூர ஆராதனை.
கற்பூரம் வெண்மை நிறம் கொண்டது. அது சுத்த சத்துவ குணமுள்ள ஆத்மாவைக் குறிக்கும். கற்பூரம் இறுதியில் ஒன்றுமில்லாமல் கரைந்து போவதுபோல ஆன்மாவானது சரீரங்களையெல்லாம் நீக்கிவிட்டு இறைவனோடு ஒன்று கலப்பதைக் காட்டுவதே கற்பூர தீபாராதனையின் நோக்கம்.

## கோயில் பூசைகள்

கோயில்களில் நடைபெறும் பூசைகள் நித்திய பூசை, நைமித்திக பூசை, காமிய பூசை என மூவகைப்படும்.

## நித்திய பூசை

அன்றாடம் செய்ய வேண்டிய பூசை நித்திய பூசை எனப்படும். அது எட்டு வகைப்படும்.

1. உத்தமத்தில் மூன்று
2. மத்திமத்தில் மூன்று
3. அதர்மத்தில் இரண்டு ஆக எட்டு.

1. பகலில் நான்கு கால பூசை இரவில் நான்கு கால பூசை செய்வது உத்தமத்தில் உத்தமம்.
2. பகலில் நான்கு காலம்: இரவில் மூன்று காலம் பூசை செய்வது உத்தமத்தில் மத்யமம்.
3. பகலில் நான்கு காலமும் இரவில் இரண்டு காலமும் ஆக ஆறுகால பூசை செய்வது உத்தமத்தில் அதமம்.
4. இவ்வாறு ஒவ்வொரு காலமும் குறைவாகி முடிவில் அதமத்தில் மத்தியமமாக ஆவது ஒரு கால பூசை ஆகும்.

## நைமித்திக பூசை

அன்றாட பூசையில் குற்றம் குறைகள் ஏற்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்யவும், முக்கியமான – சிறப்பான நாட்களில் விழாக்கள் கொண்டாடுவதற்கும் செய்யப்படும் பூசை நைமித்திகம் எனப்படும்.

## காமிய பூசை

உலகியல் பலன்கள் கருதிச் செய்யப்படும் பூசைகள் காமிய பூசை எனப்படும்.

## அபிடேகத்திற்குரிய பொருட்கள்

இறைவனுக்குச் செய்யும் அபிடேகத்திற்குரிய பொருள்கள் எவை என்றும் ஆகம நூல்கள் குறிப்பிடுகின்றன. 25 பொருள்கள் அல்லது 16 பொருள்கள் அல்லது 12 பொருள்களால் அபிடேகம் செய்யலாம்.

## 25 பொருள்கள்

1.சந்தனாதி முதலிய வாசனைத் திரவியங்கள், 2. நல்லெண்ணெய், 3. மாப்பொடி, 4. நெல்லி முள்ளிப்பொடி, 5. மஞ்சள் பொடி, 6. ஜல திரவியங்கள், 7. பஞ்சகவ்வியம், 8. பசு நெய், பசும்பால், பசுந்தயிர், தேன், கரும்புச்சாறு (அல்லது) சர்க்கரை கலந்த பஞ்சாமிர்தம், 9. பழ வகைகள், 10. பழச்சாறு, 11. இளநீர், 12. அன்னம், 13. சந்தனம், 14. மந்திர பூர்வமாகத் தயாரிக்கப்பட்ட கும்ப நீர், 15. வில்வ இலைகளோடு கலந்த தீர்த்தம், 16. சல்லடை நீர்(தாரா அபிடேகம்), 17. சங்கு தீர்த்தம், 18. தர்ப்பப்பையுடன் கலந்த தீர்த்தம், 19. விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அர்க்கிய தீர்த்தம்.

(தொடர்ச்சி…5ஆம் பக்கம்)

## ஆகம வழிபாட்டு முறைகள்

### சங்கு அபிடேகம்

அபிடேகங்களில் சிறந்தது மகா அபிடேகம். அதனிலும் சிறந்தது சங்கு அபிடேகம்.
சங்குகளில் இடம்புரிச் சங்கு, வலம்புரிச் சங்கு, சலஞ்சலம், பாஞ்ச சன்யம் என்பன குறிப்பிடத்தக்கது. அவை ஒன்றைவிட மற்றொன்று ஆயிரம் மடங்கு சிறப்பு.

### பஞ்ச கவ்வியம்

1.பசுவின் கோமயம், 2. பால், 3. தயிர், 4. நெய், 5. தருப்பையுடன் கலந்த நீர் இவை ஐந்தும் பஞ்ச கவ்வியம் எனப்படும். இவை பாவம் போக்க வல்லன.
தேவதைகள் பஞ்ச கவ்வியத்தில் வசிப்பதால் மூன்று உலகத்திலும் அது உயர்ந்தது. கோமயத்தில் அக்கினியும் தயிரில் வாயுவும் பாலில் சந்திரனும் நெய்யில் சூரியனும் வசிக்கிறார்கள் என்கிறார் பராசரர்.

### தருப்பையின் சிறப்பு

வைதிகச் சடங்குகளில் தர்ப்பை அதிக முக்கியத்துவம் பெறுவது ஏன்?
மனிதனின் ஆத்மா என்பது வித்து இல்லாமல் ஏற்பட்டது என்பது இந்து மதத்தின் கருத்து. ஆதலால் வித்தே இல்லாமல் அதாவது விதை போடாமல் முளைத்து வளரும் தர்ப்பைப்புல்லை வைதிகச் சடங்குக்குப் பயன்படுத்துகிறார்கள்.

### அட்சதை போடுவது ஏன்?

அட்சதை என்றால் முனை முறியாத அரிசி என்று பொருள். அதனைச் சேகரித்து வைத்துப் பூசையில் புஷ்பத்தைப்போல் உபயோகிப்பது வழக்கம். பழுதுபடாத அரிசியைப்போல வாழ்க்கையும் பழுதுபடாமல் இருக்க வேண்டும் என்பது கருத்து.

### அபிடேகப் பொருள்கள் – பலன்கள்

| | |
|---|---|
| தைல அபிடேகம் | சுகம் கொடுக்கும் |
| மாப்பொடி | கடனைப்போக்கும் |
| நெல்லிமுள்ளிப்பொடி | வியாதியைப்போக்கும் |
| மஞ்சள் பொடி | வசீகரத்தை உண்டாக்கும் |
| ஜல திரவியம் | சௌபாக்கியம் தரும் |
| பஞ்ச கவ்வியம் | தூய்மை உண்டாக்கும் |
| நெய் | வெற்றியைத்தரும் |
| பால் | மோட்சம் வளர்க்கும் |
| தயிர் | குழந்தைப்பேறு அளிக்கும் |
| தேன் | இசைபாடும் திறமையைத்தரும் |
| கரும்புச்சாறு | நோய் நீக்கும் |
| சர்க்கரை | பகையை அழிக்கும் |
| வாழைப்பழம் | பயிரை வளர்க்கும் |
| மாம்பழம் | சந்தானத்தை அளிக்கும் |
| மாதுளை | கோபத்தை நீக்கும் |
| கொளஞ்சி | சோகத்தைப்போக்கும் |
| நாரத்தை | நேர்மை அளிக்கும் |
| எலுமிச்சை | எம பயத்தைப்போக்கும் |
| அன்னம் | பெருஞ்செல்வம் தரும் |
| இளநீர் | போகம் தரும் |
| சந்தனம் | செல்வம் தரும் |
| வில்வ தீர்த்தம் | பயத்தைப் போக்கும் |

இம்மை, மறுமைப் பலன்களை அளிக்க வல்லது அபிடேகம்.
பக்தியோடு ஒரு பச்சிலையைக் கொடுத்தாலும் இறைவன் ஏற்றுக்கொள்வான் என்கிறார் திருமூலர்.

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

## ஆகம வழிபாட்டு முறைகள்

### பூசையும் – பூக்களும்

ஆலயங்களில் ஒவ்வொரு தெய்வ மூர்த்திக்கும் பூசைக்குரிய பூக்கள் இவை, உதவாத பூக்கள் இவை என விதிக்கப்பட்டுள்ளன.

பராசக்தியான பார்வதிக்கு அறுகும் நெல்லியும் ஆகாது.
விநாயகருக்கு அறுகு உகந்தது. துளசி ஆகாது.
விஷ்ணுவுக்கு துளசி உகந்தது. அட்சதை ஆகாது.
இராமனுக்கு அரளி அகாது.
சிவனுக்கு வில்வம் உகந்தது. தாழம்பூ ஆகாது.
பைரவருக்கு நந்தியாவட்டம் ஆகாது.

### காலை சந்தி பூசைக்கு

செந்தாமரை, புரசு, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, சண்பகம், புன்னாகம், துளசி, கொன்றை பயன்படுத்தலாம்.

### நடுப்பகல் பூசைக்கு

வெண்தாமரை, அரளி, புரசு, துளசி, நெய்தல், வில்வம், சங்கு புஷ்பம், கோ விதாரம், ஓரிலைத் தாமரை பயன்படுத்தலாம்.

### மாலை சந்தி பூசைக்கு

செந்தாமரை, மல்லிகை, ஜாதிமல்லி, மருக்கொழுந்து, வெட்டிவேர், துளசி, வில்வம் பயன்படுத்தலாம்.
மற்றைய காலங்களில் விருப்பம்போல் செய்யலாம்.
சண்பக மொட்டு தவிர மற்ற பூக்களின் மொட்டுகள் பூசிக்கத்தக்கவை.
நீலாம்பரப் பூக்களினால் தொடுக்கப்பட்ட மாலையைச் சிவபெருமானுக்கு சனிக்கிழமை தோறும் சாத்தி வந்தால் சனிக் கிரகத்தால் விளையும் துன்பங்கள் குறையும்.

### மலர் அர்ச்சனை பயன்கள்

| | |
|---|---|
| செந்தாமரை | செல்வம், வியாபார விருத்தி, ஆத்ம பலம், தகப்பனார் ஆயுள் விருத்தி கிடைக்கும். |
| வெண் தாமரை, வெள்ளை நந்தியாவட்டை, மல்லிகை | மனச் சஞ்சலத்தைப் போக்கும். |
| மஞ்சள் அரளி, பொன் அரளி, செவ்வந்தி, மஞ்சள் கொழுக்கட்டை மலர் | கடன்களை நீக்கும் மணமாகாத பெண்கட்கு மணமாகும். குரு கிரக பீடையை நீக்கும். |
| சிவப்பு அரளி | தாங்க முடியாத கவலைகளைத் தீர்க்கும். குடும்ப ஒற்றுமையைஉண்டாக்கும். |
| நீலச்சங்கு, நீலக் கனகாம்பரம் | அவச்சொல், அபாண்டமான பழி நீக்கும், தரித்திரம் நீங்கும், சனிபகவான் அருள் கிட்டும், ஆயுளைப் பெருக்கும். |
| மனோரஞ்சிதம் | தம்பதிகளுக்குள் ஒற்றுமையை உண்டாக்கும். |
| பாரிஜாதம்,அல்லிப்பூ, மங்கிய வெள்ளைப்பூ | சிறந்த பக்தியை உண்டாக்கும், அதிர்ஷ்டம் தரும். தாயாரின் ஆயுளை விருத்தி செய்யும். சனிக்கிரகத்தின் அருள் கிட்டும். |
| பாசிப்பச்சை, மருக்கொழுந்து | நல்ல விவேகம் தரும், உறவினர்க்குள் ஒற்றுமை தரும். கல்வியறிவு பெருகும். புதன் கிரக அருள் கிட்டும். |
| அடுக்கு அரளி, செம்பருத்தி, தெத்திப்பூ | ஞானம் தரும், தொழில் வளர்ச்சி உண்டாகும். |
| வில்வம், கருந்துளசி, மகிழம்பூ | இராகு, கேதுக்கள் அருளைத்தரும். அகால மரணத்தைத் தடுக்கும். |

**கால்களில் மிதிபட்ட மலர்களைப் பூசைக்குப் பயன்படுத்தக்கூடாது.**
**மலராது என்று தெரிந்த மொட்டுக்களைப் பயன்படுத்தலாகாது.**

★★★

# Melbourne - Mandrams – Upcoming Events – June 2012

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

விக்டோரியா – அவுஸ்திரேலியா

## June - சித்திரை - வைகாசி

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0411881024, 0433440194, 0417113082

| | | | | |
|---|---|---|---|---|
| 03.06.2012 | Sunday | சித்திரை | 21 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>**கூட்டு வழிபாடு**<br>**"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 05.06.2012 | Tuesday | சித்திரை | 23 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 7.30p.m. – 9.00p.m. |
| 10.06.2012 | Sunday | சித்திரை | 28 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>**கூட்டு வழிபாடு**<br>**"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 12.06.2012 | Tuesday | சித்திரை | 30 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 7.30p.m. – 9.00p.m. |
| 17.06.2012 | Sunday | வைகாசி | 04 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>**கூட்டு வழிபாடு**<br>**"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 19.06.2012 | Tuesday | வைகாசி | 06 | **அமாவாசை~**<br>**"1008 போற்றி மலர்கள்"மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>7.30p.m. – 9.00p.m. |
| 24.06.2012 | Sunday | வைகாசி | 11 | **Joint Prayer – 6.00p.m. – 8.30p.m.**<br>**கூட்டு வழிபாடு**<br>**"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு** |
| 26.06.2012 | Tuesday | வைகாசி | 13 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** 7.30p.m. – 9.00p.m. |

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

ஆண்டுச்சந்தா ரூபா ₹ 120.00 (இந்தியா)
ஆயள் சந்தா ரூபா ₹ 1600.00 (இந்தியா)

**வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா ₹ 1500.00 (இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli'Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.

# Melbourne - Mandrams – Upcoming Events – June 2012

## Vermont South

### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House**,
Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 01.06.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 04.06.2012 | MONDAY- திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 08.06.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 03.06.2012 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 17.06.2012 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Mulgrave

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

Southern Community Centre,
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref.: 80 F 5)

**Joint Prayers: Every Sunday**

| | | | |
|---|---|---|---|
| 03.06.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 10.06.2012 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"ThiruVilakku Pooja"<br>"திருவிளக்குப் பூஜை" |
| 17.06.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 24.06.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |



### மாடும் மனிதனும்:

"மாட்டுக்கும் மனிதனுக்கும் ஒரு குணம் உண்டு. ஒரு இடம் பச்சையாக இருந்தால் மாட்டுக்கும் பிடிக்காது, மனிதனுக்கும் பிடிக்காது. தருமம் செய்தாலும் பிடிக்காது, செய்யாவிட்டாலும் பிடிக்காது. தொண்டு செய்தாலும் பிடிக்காது, செய்யாவிட்டாலும் பிடிக்காது. மனித இனம் நிரந்தர புத்தி இல்லாதது."

–அன்னையின் அருள்வாக்கு



# Sydney - Mandrams - Upcoming Events – June 2012

## Homebush

### Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre

Contact: 02-97643872, 0416217317

**Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 01.06.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 04.06.2012 | MONDAY- திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 08.06.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Westmead

### Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW (Australia)

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School - Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 01.06.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 04.06.2012 | MONDAY- திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 08.06.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.06.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## இடத்துக்குத்தக்கபடி

“உலகில் தருமம் என்பதும், அதருமம் என்பதும் இருக்கும் இடத்தைப் பொறுத்து அமைகின்றன. நல்லது என்பதும், கெட்டது என்பதும் அவரவர் மனத்தைப் பொறுத்து அமைகின்றன.

புன்னை மரம் நல்லதொரு நதிக்கரையின் ஓரத்தில் இருந்தால் நல்ல வாசம் கிட்டும். அதுவே சாகக்கடை ஓரத்தில் இருந்தால் அதன் வாசனை எட்டாது.

**அதுபோலத்தருமம், அதருமம், நல்லது, கெட்டது என்பன இருக்கும் இடத்தைப் பொறுத்து அமையும்.”**

**~ அன்னையின் அருள்வாக்கு -**

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## பொருள் வேண்டி வந்தவர்களுக்குத் தொகை சொன்னேன்

சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தராக இருந்தவர் டாக்டர் லலிதா காமேஸ்வரன். அவர் தந்தையார் நாவலர் சோமசுந்தர பாரதி, சிறந்த தமிழறிஞர். அஞ்சாநெஞ்சம் படைத்தவர்.

திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்கள் சமுதாயச் சீர்திருத்தங்களில் மட்டுமே நாட்டங்கொண்டவர். ஆன்மிகத்தில் அவ்வளவாக ஈடுபாடற்றவர். அவருடைய உறவினர்கள் சிலர் மதுரையில் இருந்தனர். 1981ஆம் ஆண்டு அவரது உறவினர்கள் சிலர் மதுரையிலிருந்து வந்திருந்தனர். “நீங்கள் சென்னையில்தானே இருக்கிறீர்கள்..? சென்னைக்குப் பக்கந்தானே மேல்மருவத்தூர் இருக்கிறது..? எங்களையெல்லாம் அழைத்துக்கொண்டு போகக்கூடாதா..? அங்குள்ள அடிகளார் அவர்களைச் சந்திக்க உதவி செய்யக்கூடாதா..?” என்று ஆவலோடு கேட்டனர்.

அப்போது அவருக்கு சித்தர் பீடம் பற்றியோ, அடிகளார் பற்றியோ அவ்வளவு தெரியாது. “எனக்கு அங்கே யாரையும் தெரியாது. அங்கே தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்க்குத் தொடர்புண்டு. அவர் என் தந்தையின் மாணவர்களில் ஒருவர். அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டுப் பாக்கிறேன். அப்புறம் உங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு போகிறேன். போதுமா..?” என்றார். உறவினர்கள் சரியென்று சம்மதித்தனர்.

சென்னைக்கு வந்து தெ.பொ.மீனாட்சி சுந்தரம் அவர்களோடு தொடர்பு கொண்டார். எங்கள் உறவுக்காரப் பெண்களையெல்லாம் மருவத்தூர் வரப்பிரியப்படுகிறார்கள். அடிகளாரைச் சந்திக்க வேண்டுமாம். எனக்கோ அங்கே யாரையும் தெரியாது. நீங்கள்தான் அதற்கு உதவி செய்ய வேண்டும். விடுமுறை நாட்களில்தான் என்னால் வரமுடியும். ஏற்பாடு செய்ய முடியுமா..?” என்று கேட்டார்.

“ஒரு ஞாயிற்றுக்கிழமை உங்கள் உறவினர்களோடு புறப்பட்டு வாருங்கள்” என்று சொல்லியிருந்தார் பெரியவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம்.

அவ்வாறே ஒரு ஞாயிற்றுக்கிழமை உறவினர்களோடு வந்தார். டாக்டர் லலிதா காமேஸ்வரன். தெ.பொ.மீ. அவரை அடிகளார் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

“என்னம்மா..? இங்கே நடக்கும் சீர்திருத்தங்களையெல்லாம் பார்த்தீர்களா..? பெரியார் சமய வரம்பிற்கு வெளியே இருந்தகொண்ட சொன்ன குறைபாடுகளை எல்லாம், நான் சமய எல்லைக்குள் இருந்தகொண்டே மாற்றியமைத்துக்கொண்டு வருகிறேன். நீங்களே பார்த்து உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். ஆண், பெண் சமத்துவம், சாதி மத வேறுபாடுகளைக் களைதல், எழுத்தறிவற்றவர்களுக்கும், பூசை முதலிய வழக்கங்களைக் கற்றுக்கொடுத்து, தமிழ் மொழியிலேயே பூசைகள் செய்யவும், 108 போற்றி, 1008 போற்றி சொல்லவும், கூட்டு வழிபாடுகள் நடத்தவும் வழி வகுத்திருக்கிறேன். கோயிலைச் சுற்றிப் பார்த்து வழிபாடு செய்துவிட்டு வாருங்கள்” என்றார் அடிகளார்.

கோவிலுக்குள் சென்று வழிபட்ட பிறகு ஓர் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொண்டார்கள்.

சிறிதுநேரம் கழித்து “அடிகளார் அருள்வாக்குச் சொல்கிறார்கள். எல்லோரும் என்னுடன் வாருங்கள்” எனச் சொல்லி அழைத்து வந்தார் தெ.பொ.மீனாட்சி சுந்தரம்.

உறவினர்களையெல்லாம் அருள்வாக்கு கேட்க அனுப்பி வைத்து விட்டு, வெளியே காத்திருந்தார் லலிதா காமேஸ்வரன்.

“என்னம்மா..? நீங்கள் உள்ளே போகவில்லையா..?” எனக் கேட்டார் தெ.பொ.மீ.

(தொடர்ச்சி…11ஆம் பக்கம்)

## அருள்வாக்கும் அனுபவங்களும்....

“அவரவர்களுக்கும் ஒவ்வொருவிதமான துன்பம் இருக்கிறது. வருத்தம் இருக்கிறது. அவர்கள் மனம்விட்டு அருள்வாக்கு கேட்கப் போயிருக்கிறார்கள். அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதுதானே விருந்தோம்பல். அதனால் நான் போகவில்லை” என்றார் லலிதா காமேஸ்வரன்.

“நீங்களும் கட்டாயம் அருள்வாக்கு கேட்கவேண்டும். அவர்கள் வந்தபிறகு நீங்கள் செல்லுங்கள்” என்று அனுப்பி வைத்தார்.
உள்ளே சென்றதும் “என்ன வேண்டும் கேள் மகளே!” என்றாள் அன்னை.

“எனக்கு இறைவன் அருள்தான் வேண்டும். வேறொன்றும் வேண்டாம்” என்றார்.

“மகளே! உன் கணவன் அரசாங்கப் பணியிலிருந்து ஓய்வுபெறப் போகிறான். அவனைப் பற்றிய கவலை உன் மனத்திலிருக்கிறது. உன் கணவனின் அந்தஸ்து, கௌரவம் குறையாமல் பார்த்துக்கொள்வேன்” என்றாள் அன்னை.

“எனக்கு அன்னையின் அருள்தான் நிலைத்திருக்கவேண்டும்” எனறு மறுபடியும் சொன்னார் லலிதா காமேஸ்வரன்.

“உன் குழந்தைகள் எல்லாம் வெளிநாட்டில் வாழ்கிறார்களே.. என்று கவலைப்படாதே.. அவர்களுக்கு ஒரு குறையும் வராமல் பார்த்துக்கொள்வேன்” என்றாள் அன்னை.

“சரி தாயே! என்று சொல்லி எழுந்தார். அப்போது “சித்திரா பௌர்ணமியன்று கலசவிளக்கு யாக பூசை நடக்கும். ஒரு கலசம் வாங்கி வீட்டிற்கு எடுத்துச் சென்று வைத்துக்கொள் மகளே!” என்றாள் அன்னை.

அவருடன் வந்த உறவுக்காரர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தொகை செலுத்தி இரசீது வாங்கிக்கொண்டிருந்தார்கள். “என்ன செய்கிறீர்கள்..?” என்று விசாரித்தபோது, ஆளுக்கு 200 ரூபாய் கட்டிக் கலசம் வாங்கிப்போய் வீட்டில் வைக்கும்படி அம்மா சொன்னார்கள்” என்றார்கள்.

“என்னிடமும் அம்மா சொன்னார்கள். கலசம் வாங்கிப் போகச் சொன்னார்கள். தொகையைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லையே…?” என்றார் லலிதா காமேஸ்வரன்.

“மறுபடியும் உள்ளே போய் அருள்வாக்கில் உங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளுங்கள்” என அனுப்பி வைத்தார் தெ.பொ.மீ.

“எல்லோருக்கும் ஒரு தொகை சொல்லியிருக்கறீர்கள். கலசபூசைக்கு எனக்கு ஒரு தொகையும் சொல்லவில்லையே..” என்று அம்மாவிடம் கேட்டார்.

“உன் விருப்பம்போல் செய் மகளே! பொருள்வேண்டி வந்தவர்க்கெல்லாம் தொகை சொன்னேன். நீ அருள் வேண்டி வந்தாய் மகளே! ஆதனால்தான் சொல்லவில்லை” என்றாள் அன்னை.

திருமதி லலிதா காமேஸ்வரனின் முதல் அனுபவம் இது!

**“Dear Son, Just like one’s shadow follows, the karma will follow each and everyone. All of you should understand this and act accordingly”**

**-Amma’s Oracle**

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

**ஓம் சக்தியே!**
**ஆதிபராசக்தி சித்தர் பீடம்**
**மேல்மருவத்தூர்**



**ஆதிபராசக்தியே!**
**2012**
**ஸ்ரீ கர - ஸ்ரீ நந்தன வருடம்**

## ஆலய சிறப்பு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| வைகாசி | 22 | 04.06.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஆனி | 05 | 19.06.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 19 | 03.07.2012 | செவ்வாய் | பௌர்ணமி |
| ஆடி | 03 | 18.07.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 04 | 19.07.2012 | வியாழன் | அமாவாசை |
| ஆடி | 07 | 22.07.2012 | ஞாயிறு | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 08 | 23.07.2012 | திங்கள் | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 17 | 01.08.2012 | புதன் | பௌர்ணமி |
| ஆவணி | 01 | 17.08.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 15 | 31.08.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| ஆவணி | 19 | 04.09.2012 | செவ்வாய் | ஆன்மிககுரு அம்மா திருமணநாள் |
| ஆவணி | 30 | 15.09.2012 | சனி | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 13 | 29.09.2012 | சனி | பௌர்ணமி |
| புரட்டாசி | 29 | 15.10.2012 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 30 | 16.10.2012 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| ஐப்பசி | 13 | 29.10.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஐப்பசி | 28 | 13.11.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 13 | 28.11.2012 | புதன் | பௌர்ணமி – கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 27 | 12.12.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 28 | 13.12.2012 | வியாழன் | அமாவாசை |
| மார்கழி | 11 | 25.12.2012 | செவ்வாய் | கிறிஸ்மஸ் |
| மார்கழி | 14 | 28.12.2012 | வெள்ளி | பௌர்ணமி |

# படகும் பாவனையும்:

“ஒரு படகில் இரண்டு பக்கமும் உட்கார்ந்திருப்பவர்கள் நான்கு நான்கு பேர் துடுப்புப் போட்டுத் தள்ளினால் தான் படகு வேகமாகச் செல்லும், கரையும் சேரும். துடுப்பினை வைத்துக்கொண்டு தள்ளுவதுபோல பாவனை செய்தால் படகு வேகமாகவும், செல்லாது, கரையும் சேராது. அதுபோல ஆன்மிகத்திற்கு வந்துவிட்ட நீங்கள் உண்மை உணர்வுடனும், உள்ளன்போடும் தொண்டு செய்தால் கரை சேரலாம். தொண்டு செய்வதுபோல பாவனை செய்தால் நீங்கள் முன்னேறவும் முடியாது. கரை சேரவும் முடியாது.

உங்கள் பூர்வ புண்ணியக் கணக்கை வைத்து உங்களுக்குச் சில பொறுப்புகள் அளித்திருக்கிறேன். அவற்றைப் பொறுப்போடு செய்யாமல் பாவனை பண்ணினால் பாவந்தான் மிஞ்சும்.”

– மேல்மருவத்தூர் அன்னையின் அருள்வாக்கு

## Brisbane – Mandram – Upcoming Events – June 2012



ஓம் சக்தி!

**Melmaruvathur Aadhiparasakthi Brisbane Mandram**

**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பிரிஸ்பேர்ண் மன்றம்**

P.O.Box: 750, SumnerPark, BC, Qld 4074



"Service and Devotion are the Eyes of Spirituality"

"Spirituality is knowing, understanding and realizing Thyself" – **Melmaruvathur Amma's Oracle.**

**Bajan:**
**5.00p.m to 7.00p.m.**

**10.06.2012**
**Sunday**

**கூட்டுப்பிரார்த்தனை:**
மாலை 5.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை

**ஞாயிற்றுக்கிழமை – வைகாசி 28**

**1 Lalina Street, Middle Park – Qld 4074**

Contacts:

Sakthi Para
Mob: 0438 778 483

Sakthi Jayanthan
Mob.: 0402907064

Sakthi Kalyanasundaram
Mob.: 0411165067

**நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம் - நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்**

# அம்மா செய்யும் இரசவாதம்

எந்த உலோகத்தையும் தங்கமாக்கும் முறைக்கு இரசவாதம் என்று பெயர். ஒரு கிராமத்தில் இருந்த ஒரு மகானுக்கு இந்த இரசவாத வித்தை தெரியும். இதைத் தெரிந்து கொண்ட அமர்சிங் எனும் திருடன், எப்படியாவது இந்த மகானைக் கைக்குள் போட்டுக்கொண்டு தங்கம் பெற்றுப் பெரிய பணக்காரன் ஆக நினைத்தான். அடிக்கடி அவரது ஆசிர்வாதம் பெற ஆரம்பித்தான். அந்த மகான் சீடர்களுக்குச் செய்யும் உபதேசங்னளையும், தியானப் பயிற்சிகளையும் பார்த்து அவனுக்கும் சீடனாகும் ஆசை வந்தது.

சீடனானான். குரு மனதில் இடம் பிடித்தான். குருவே எல்லோரிடமும் அவனைப் பற்றிப் பாராட்டும் அளவு சிறந்த சீடனாகிவிட்டான். பிரதம சீடனாகவும் ஆகிவிட்டான். ஆனாலும் அவன் மனதில் இருந்த இரசவாத வித்தை இரகசியத்தை அறியும் நோக்கம் மட்டும் அப்படியே இருந்தது.

இந்த நிலையில் அந்த குரு படுத்த படுக்கையாகிவிட்டார். தன் காலம் முடிவதற்குள் அமர்சிங்கை குருவாக்கி இரசவாத வித்தை கற்பிப்பதாகக் கூறினார். அமர்சிங் காத்திருந்தான்.

உயிர்பிரியும் முன் அமர்சிங்கை அழைத்த குரு, இரும்பு மனிதனாக இருந்த அவனைத் தங்க மனிதனாக மாற்றியதுதான், தான் செய்த பெரிய இரசவாதம் என்று கூறி உயிர் விட்டார்.

**நம் ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களும் இப்படித்தான் தன்னை நாடிவரும் ஆன்மாக்களைத் தங்கமாக்கும் தங்க அடிகளாராக வாழ்ந்து வருகிறார்கள்.**

– **13.06.2002 அன்று பெங்களுர் மேடை நிகழ்ச்சியின்போது ஆற்றிய உரையிலிருந்து**

– (நூல்: "சக்தி ஒளி" ஜுலை 2002)

# திருமதி அம்மா பதில்கள்



- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

**அனைத்து கடவுள்களுக்கும் ஒரே சக்தியின் பல்வேறு வடிவங்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. ‘சக்தி ஒளி’யில் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணம் ஊழ்வினையே என்றும் மக்கள் தொண்டும் இறைத் தொண்டும் செய்தால் ஊழ்வினையிலிருந்து விடுபட அன்னை வழி செய்வாள் என்றும் படிக்கிறோம். மகாபாரதத்தில் பகவான் கிருஷ்ணர் “எந்த ஒரு காரியத்தையும் நீ செய்ததாக எண்ணாதே! உன் வடிவிலிருந்து நான்தான் செய்கிறேன்” என்கிறார். அனைத்துச் செயல்களும் இறைவனால் செய்யப்பட்டிருக்க, போன ஜென்மத்தில் செய்த நன்மை, தீமைக்கேற்ப இந்த ஜென்மத்தில் நாம் நன்மை தீமைகளை அடைகிறோம் என்பது சக்தியின் வடிவமாக உள்ள பகவானின் சொற்களுக்கு மாறுபட்டு உள்ளதே..! உங்கள் பதிலைக் கூறுங்கள் அம்மா…!**

உங்கள் கேள்வியைப் படித்ததும் எனக்கே தலை ஒரு சுற்று சுற்றிவிட்டது. பதில் வெரி சிம்பிள்! சமீபத்தில் அம்மா அருள்வாக்கில் “குழம்பிய குட்டையில் நீர் குடிக்க நினைக்காதே!” என்று கூறினார்கள். மகாபாரதம், இராமாயணம் என்று புராணங்களை படித்துக் குழம்பிக்கொண்டால் தெளிவான அறிவு பிறக்காது. கதைகளைவிட அதில் உள்ள சிறந்த கருத்துக்களைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். குட்டையைக் குழப்பிவிட்டுத் தெளிவான நீரைக் குடிக்க முடியாது. அதுபோல எல்லா விசயங்களையும் போட்டுக் குழப்பிக்கொண்டு தெளிவான அறிவைப் பெற முடியாது.

இறைவனை வழிபட்டால் அருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு, சென்ற பிறவி, இந்தப்பிறவி, அடுத்த பிறவி என்று பிறவிகளை ஆராய்தல், நல்வினை, தீவினை, ஊழ்வினை என்ற குழப்பம் இவைகள் ஏதுமில்லாமல் மனதை வெற்றிடமாக வைத்துக்கொண்டு இந்தப் பிறவியில் நம் உடல், உள்ளத் தூய்மையோடு இருக்கிறோமா? பிறருக்குத் தீங்கு நினைக்காமல் வாழ்கிறோமா? நம்மால் முடிந்த உதவியைப் பிறருக்குச் செய்கிறோமா? என்று நினைத்துப் பாருங்கள். அம்மா அருள்வாக்கில் “ நீ வாழும் காலத்தில் உன்னால் பத்துப்பேர் நல்ல படியாக வாழ்ந்தார்கள் என்று சொல்லும்படி வாழ வேண்டும்” என்று கூறுகிறார்கள். அதுபோல வாழ்ந்துவிட்டுப் போங்களேன்! நல்லதை நினைத்து, நல்லதைச் செய்தால் எந்த வினையைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை எல்லாவற்றையும் அம்மா பார்த்துக்கொள்வார்கள்.

**குருவருள் பெற ஒரு பக்தனுக்கு எது முதலில் தேவை அம்மா…?**

குருவருள் பெற ஒரு பக்தனுக்கு முதலில் தூய்மையான உள்ளமும், குருவாக ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும், முழுமையான நம்பிக்கையும் தேவை.

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 03.06.2012 | ஞாயிறு | வைகாசி | 21 | **வைகாசி விசாகம்** |
| 04.06.2012 | திங்கள் | வைகாசி | 22 | **பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 10.06.2012 | ஞாயிறு | வைகாசி | 28 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவுஸ்திரேலியா |
| 19.06.2012 | செவ்வாய் | ஆனி | 05 | **அமாவாசை விரதம் –**<br>**1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம் |
| 26.06.2012 | செவ்வாய் | ஆனி | 12 | **ஆனி உத்திரம்** |
| 03.07.2012 | செவ்வாய் | ஆனி | 19 | குரு பூர்ணிமா – பௌர்ணமி தினம் –<br>“பாத பூஜை“, குரு மந்திரம் ஓதுதல்<br>1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம்<br><br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 08.07.2012 | ஞாயிறு | ஆனி | 24 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவுஸ்திரேலியா |
| 18.07.2012 | புதன் | ஆடி | 03 | ஆடி அமாவாசை விரதம் |
| 22.07.2012 | ஞாயிறு | ஆடி | 07 | **ஆடிப்பூரம்**<br>கஞ்சிக்கலயம் ஏந்தி அன்னைக்கு கஞ்சி வார்த்தலும்<br>சுயம்பிற்கு பாலாபிடேகம் செய்தலும்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி<br>வார வழிபாட்டு மன்றம் |
| 24.07.2012 | செவ்வாய் | ஆடி | 09 | நாக பஞ்சமி |
| 27.07.2012 | வெள்ளி | ஆடி | 12 | வரலட்சுமி விரதம் |
| 01.08.2012 | புதன் | ஆடி | 17 | **ஆவணி அவிட்டம்**<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 05.08.2012 | ஞாயிறு | ஆடி | 21 | ஸ்ரீ மஹா சங்கடஹர சதுர்த்தி<br>**திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவுஸ்திரேலியா |
| 09.08.2012 | வியாழன் | ஆடி | 25 | கோகுலாஷ்டமி |
| 29.08.2012 | புதன் | ஆவணி | 13 | ஓணம் பண்டிகை |
| 19.09.2012 | புதன் | புரட்டாசி | 3 | ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி |
| 29.09.2012 | சனி | புரட்டாசி | 13 | **பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 30.09.2012 | ஞாயிறு | புரட்டாசி | 14 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவுஸ்திரேலியா |
| 29.10.2012 | திங்கள் | ஐப்பசி | 13 | **பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 04.11.2012 | ஞாயிறு | ஐப்பசி | 19 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவுஸ்திரேலியா |
| 13.11.2012 | செவ்வாய் | ஐப்பசி | 28 | தீபாவளி பண்டிகை |
| 27.11.2012 | செவ்வாய் | கார்த்திகை | 12 | கார்த்திகை தீபம் |
| 28.11.2012 | புதன் | கார்த்திகை | 13 | **பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 02.12.2012 | ஞாயிறு | கார்த்திகை | 17 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவுஸ்திரேலியா |

# Divine Miracles at Melmaruvathur

## What the religious Guru Thiru Adigalar said:

Adigalar said, "We have involved all the districts in charitable food distribution. All are working hard and doing well. They do sincere service. Those who participate in charitable food distribution get a lot of satisfaction. All this is true but our aim has not been fulfilled. Those who partake food praise us and go. They go with satisfaction. What we expect from them is not mere satisfaction and praise! Do you know what we expect from them? They should aspire that such activities should go on in their towns as well. They should try and do the needful to proliferate such activities. That is what we expect and this aim has not yet been fulfilled. During our time we should convert our Siddha Peetam into Tamil Nadu's Dharmasthala. All people who come here must be fed on plantain leaves. Only if such charitable acts are increased, our country will prosper, the fields will turn green and prosperity will spread. Mother will showerprosperity on this nation. "Mother said, "The only way to go up the ladder is to have devotion, do service, show charity, be righteous and adopt a life of sacrifice and hard work." Society elevates itself by feeding the needy. Morever, an individual accumulates merit and becomes eligible for Grace.

### The Law of Karma:

A person's joy and sorrow are based upon his acts of virtue and his acts of sin. Their life also gets organiszed according to their actions. This is the truth. This is the law of Karma that controls everyone's life. However, many intellectuals oppose it and whatever scientific revolutions take place, this is the truth. This will not change. The Law of Karma will not change because of the world'a opposition. This is a lesson to be learnt from individual life experiences.

### The path shown by ancestors:

The great men, sages and siddhas knew this basic truth and hence they emphssised the value of charity to people. They gave primary importance to distribution of food. "Those who give food give life" says the Buddhist book 'Manimekalai'.

Valluvar said, "He who strives to appease the hunger of the starved is indeed the most efficient man. All other skills are secondary". "Feed the hungry; that is your bank balance", said Valluvar. Men like Pattinaththar and Vallalar did a great deal to appease the hungry and insisted that this was the best form of charity.

### A part of the income:

"Give away one tenth of ypur income for charity", says Mother. If you distribute food to the starved, your life will become elevated and the nation will also prosper. A man who feeds the hungry has nothing to fear from evil. This deed will save you from hunger.

### Objects of vanity:

Today as the needs of people have increased there is little tendency for charity. Television, radio, refrigerator, washing machine, car and the bunglow will not accompany one in after life. It is only the alms that you give and the charitable deeds you do that will help you in after-life. A popular saying says, 'Children benefit from the good deeds of parents'. The best form of charity is distribution of food. It is customary to celebrate the birthdays of great men and the sages by distributing food. In all religious activities, Guru pooja days, birthdays, weddings and even rites connected with death this 'Anna daanam' finds a primary place. If this process is adopted by everyone to celebrate special occasions, good will accrue.

*****